TNOU

# TAMIL NADU OPEN UNIVERSITY

**Dr. M. BHASKARAN, Ph.D.**
**Vice-Chancellor**

Date : 18.08.2018

## Recognition of Academic Programmes of Tamil Nadu Open University (TNOU) by UGC

### Press Release

Tamil Nadu Open University (TNOU) which is established by the Act of Tamil Nadu Legislature and accorded with 12B Status of University Grants Commission (UGC) has been offering Open and Distance Learning Academic Programmes since 2004. As of now the TNOU offers various Academic Programmes ranging from Certificate to Research Degree level.

With reference to the Public Notice issued by the University Grants Commission dated 14th August,2018 given recognition to 38 Academic Programmes of TNOU under Open and Distance Learning (ODL) mode for five years from 2018-19 to 2022-23. In this regard TNOU clarified that University Grants Commission gives recognition only for the Academic Programmes at Undergraduate and Post-graduate level as per the UGC (ODL) Regulations, 2017.

We are happy to inform that among 14 State Open Universities and over 100s of other Distance Education Institutions at National Level across the Country, Tamil Nadu Open University (TNOU) has been recognized with highest number of Academic Programmes(38) next to Indira Gandhi Open University (IGNOU), New Delhi which was recognized 42 Academic Programmes.

Further for the remaining Academic Programmes UGC sought some clarifications and the same will be provided in week's time and will obtain the permission to continue the Programmes.

As for as Certificate, Diploma, Post- Graduate Diploma and Vocational Diploma Programmes are concerned, Tamil Nadu Open University is free to offer these Programmes under ODL mode after the approval of the statutory bodies of TNOU.

Accordingly, all the Certificate, Diploma, Post- Graduate Diploma and Vocational Diploma Programmes offered by Tamil Nadu Open University under ODL mode are valid and continue to remain on offer. It is further clarified that TNOU's Professional Programmes like B.Ed, B.Ed Special Education have been recognized by the respective Regulatory Bodies and the relevant documents have been submitted to UGC for approval.

In addition, TNOU will continue to offer 128 Academic Programmes of Certificate, Diploma, Post-Graduate Diploma and Vocational Diploma and these Programmes do not require UGC recognition.

18/8/18

**(Dr.M.Bhaskaran)**

No.577, ANNA SALAI, SAIDAPET, CHENNAI - 600 015.
Tele : 91-44-24306633, Fax : 91-44-24356767
E-mail : vc@tnou.ac.in / tnouvc@gmail.com URL : www.tnou.ac.in

முனைவர். மு.பாஸ்கரன், பிஎச்.டி.
துணைவேந்தர்

# தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

18.08.2018

பத்திரிகைச் செய்தி

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் படிப்புகளுக்கு பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு UGC அனுமதி

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தமிழ்நாடு அரசால் சட்டப் பேரவையில் சட்டம் இயற்றப்பட்டு 2002-இல் தொடங்கப்பட்டது. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் UGCயின் 12B தகுதி நிலைப் பெற்று, திறந்தநிலை மற்றும் தொலைநிலைக் கல்வி வாயிலாக சான்றிதழ், பட்டயம், பட்டம் மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளை வழங்கிவருகிறது. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் அனுமதியோடு நேரடி முறையில் எம்.ஃபில், பி.எச்.டி படிப்புகளையும் வழங்கிவருகிறது.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு UGC-வின் திறந்தநிலைக் கல்வி மற்றும் தொலைநிலைக் கல்வியின் (Open Distance Learning) 2017 புதிய வழிகாட்டு நெறிமுறைகளின் படி, பட்டம் மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளுக்கு மட்டும் பாடவாரியான அங்கீகாரம் வழங்கிவருகிறது. சான்றிதழ், பட்டயம், முதுநிலைப் பட்டயம், தொழில் சார் கல்விப் பட்டயங்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் சட்ட விதிகளின் படி, பல்கலைக்கழகமே படிப்புகளை வழங்கலாம் என பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு அறிவித்துவிட்டது. இதன்படி தற்போது 128 படிப்புகள் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் UGCயிடம், பல்கலைக்கழகங்கள் பாடவாரியான அனுமதி பெற்றுத்தான் படிப்புகளை வழங்க முடியும் என்ற நிலையில் இந்தியாவில் உள்ள 14 திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் தொலைநிலைக் கல்வி இயக்கங்கள் தாங்கள் வழங்கும் பட்டம் மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளுக்கு, பாடவாரியான அங்கீகாரம் பெற பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவிற்கு (UGC) விண்ணப்பித்து இருந்தன.

எண்.577, அண்ணா சாலை, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
தொலைபேசி : 91-44-24306633, தொலைநகல் : 91-44-24356767,
மின்அஞ்சல் : vc@tnou.ac.in / tnouvc@gmail.com இணையதளம் : URL : www.tnou.ac.in

இதன்படி 2018-2019 கல்வி ஆண்டில் இருந்து 2022-23 கல்வி ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளுக்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு 38 பட்டம் மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது (கடிதம் எண்-2-10/2018 (DEB-1) 14-8-2018).

இது இந்தியாவிலே இந்திரா காந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட, அதிகபட்சமான 42 பாடத்திட்டங்களுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையாக தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் முறைப் படிப்புகளான (Professional courses) B.Ed, B.Ed சிறப்புக் கல்வி வழங்குவது தொடர்பாக புதுடெல்லி தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) மற்றும் இந்திய மறுவாழ்வுக் கழகம் (RCI) வழங்கிய அனுமதி ஆணையை பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவிற்கு மேற்படி படிப்புகளுக்கான அனுமதி வேண்டி தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் அனுப்பி வைத்துள்ளது. மேலும், ஒரு சில பாடங்களுக்கான கூடுதல் விபரங்களை பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு கோரியபடி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, இதன் அடிப்படையில் மீதமுள்ள படிப்புகளுக்கும் விரைவில் அனுமதி பெறப்படும்.

இதன்படி தற்போது தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் வழங்கும் படிப்புகள் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் UGCயின் முழு அங்கீகாரம் பெற்ற படிப்புகளாகிறது.

18/8/18

(முனைவர் மு. பாஸ்கரன்)
துணை வேந்தர்

Vice-Chancellor,
Tamil Nadu Open University,
No.577, Anna Salai,
Saidapet, Chennai-600 015.